பக்கம் ... ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆனி 19 சனிக்கிழமை (03 07 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 217

# பாதுகாப்புச் செலவுக்குப் பணம்; அதனால் சம்பள உயர்வு நிறுத்தம்!

## தாக்கங்கள் குறித்து மீள்பரிசீலனை

கொழும்பு, ஜூலை 3

பாதுகாப்புச் செலவுக்கும், யுத்தத்தினால் பாதிக்கப்படுவோருக்கான புனர்வாழ்வுக்கும், புனர் நிர்மாணத்துக்கும் போதிய நிதியை ஒதுக்க வேண்டி உள்ளதால்—

அரசாங்க ஊழியருக்கு வழங்குவதாக அறிவிக்கப்பட்ட சம்பள உயர்வு நிறுத்தப்பட்டுள்ளது

ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளதுபோல சம்பள உயர்வுகளை ஓ்மாதம் தொடக்கம் வழங்க முடியவில்லை என்றும்—

அது அடுத்த வருடத்துக்கு ஒத்திவைக்கப்பட்டிருப்பதாகவும் — அரசாங்கம் நேற்று அறிவித்தது.

1993 ஆம் நிதி ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் அரசாங்க ஊழியர்கள் சகலருக்கும் 30 சதவீத சம்பள உயர்வு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

அறிவிக்கப்பட்ட இந்தச் சம்பள உயர்வில் நிதி ஆண்டி ? தொடக்கமான ஜனவரியில் குறிப்பிட்ட ஒரு பகுதிப் வழங்கப்பட்டது.

(5 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் தமிழர் வேட்டை இன்னும் தொடர்கிறது

### கொட்டாஞ்சேனையில் 17 பேர் கைது

கொழும்பு, ஜூலை 3

கொழும்பிலும், அதன் புறநகர்ப் பகுதிகளிலும் தமிழர்கள் தொடர்ந்து கைது செய்யப்பட்டு வருவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த செவ்வாய்க்கிழமை கொட்டாஞ்சேனைப் பகுதியில் 17 தமிழர்கள் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது.

இரவிலும் கூட பொலீஸார் தமிழர்களைக் கைது செய்து கூட்டிச் செல்வதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## மணலாறில் கண்ணிவெடி; சிப்பாய் பலி; இருவர் காயம்

### படையினரின் வாகனம் சேதம்

கொழும்பு, ஜூலை 3

மணலாறு, பாலத்துச் சேனைப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிலக் கண்ணி வெடிச் சம்பவம் ஒன்றில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார் மேலும். இரு படையினர் காயமடைந்தனர் படையினர் சென்ற வாகனம் பலத்த சேதமடைந்தது.

கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் இத் தகவலை தெரிவித்தன

பாலத்துச்சேனைப்பகுதியில் படையினர் மேற்கொண்ட பாரிய தேடுதல் நடவடிக்கை ஒன்றின் போதே நிலக்கண்ணி வெடிச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது (ஒ-எ)

## 80,000 ஈழ அகதிகளையும் விரைவில் அனுப்ப வேண்டு

### ஜெயலலிதா கோரிக்கை

சென்னை, ஜூலை 3

தமிழகத்தில் தங்கியுள்ள சுமார் 80 ஆயிரம் ஈழத்தமிழ் அகதிகளையும் விரைவில் திருப்பி அனுப்பி விடவேண்டும் என்று முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா மத்திய உள்துறை இணை அமைச்சர் ராஜேஷ் பைலட்டைக் கேட்டுக் கொண்டார்.

சென்னை வந்திருந்த திரு. பைலட் நேற்று செல்வி ஜெயலலிதாவுடன் ஒன்றரை மணித்தியாலங்கள் வரை பேச்சுக்கள் நடத்தினார். அப்போது முன் கண்ட கோரிக்கையை முதலமைச்சர் முன் வைத்தார்.

முதலமைச்சரின் கோரிக்கை மீது மத்திய அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்று இணை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (ஒ-எ)

### ராஜேஷ் பைலட்-ஜெயலலிதா சந்திப்பு

## புலிகளின் நடவடிக்கைகளை முறியடிப்பது குறித்து பேச்சு

சென்னை, ஜூலை 3

விடுதலைப் புலிகள் பிரச்சினை மிகவும் சிக்கலான தேசியப் பிரச்சினை என்றும்—

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை முறியடிக்க மத்திய, மாநில அரசுகள் இணைந்து செயல்படவேண்டும் என்றும்— மத்திய உள்துறை இணை அமைச்சர் ராஜேஷ் பைலட் தெரிவித்தார்.

முதலமைச்சர் ஜெயலலிதாவுடன் பேச்சுவார்த்தை நடத்திய பின்பு, புதுடில்லி திரும்பும்போது விமான நிலையத்தில் செய்தியாளர் மத்தியில் பேசுகையில் இணை அமைச்சர் முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

தமிழகத்தில் தீவிரவாதிகளை ஒடுக்குவதற்கு வசதியாக மேலும் ஐந்நூறு ஏ. கே. 47 ரக துப்பாக்கிகளை மாநில அரசுக்கு மத்திய அரசு வழங்கும் என்றும் அவர் கூறினார்.

சிறையில் இருந்து விடுதலைப் புலிகள் சிலர் தப்பிச் சென்ற சம்பவம் குறித்துத் தாம் முதலமைச்சரிடம் கவலை தெரிவித்ததாகவும் அப்போது பின்னணி ஏதுமற்ற தனிச்சம்பவம் அது என்று முதலமைச்சர் பதிலளித்தார் என்றும் இணை அமைச்சர் கூறினார். (ஒ-எ)

## பாணின் விலை திங்கள் முதல் 50 சதத்தால் உயர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 3

பாணின் விலை நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் 50 சதத்தால் உயர்த்தப்படவிருக்கிறது.

யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் மேற்கண்டவாறு அறிவித்துள்ளது.

நேற்று செயலகத்தில் யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர்களும், செயலக அதிகாரிகளும் பங்குபற்றிய கூட்டத்தில் விலையை உயர்த்துவது சம்பந்தமான முடிவு எடுக்கப்பட்டது.

எமது சங்க அங்கத்தவர்களுக்குத் தேவையான மூலப் பொருள்களான மா, சீனி, மற்றும் துணைப்பொருள்களான ஈஸ்ற், ஹைபோ போன்றவற்றை [illegible] தினர் கொழும்பிலிருந்து கப்பல் மூலம் எ[illegible]

(6 ஆம் பக்கம் பார்க்க)

### பூநகரிப் பாதை திறப்பு விவகாரம்:

## விடுதலைப் புலிகள் அறிக்கை ஜெனிவாவில் ஆராயப்படும்

யாழ்ப்பாணம், ஜூலை 3

பூநகரிப் பாதையைத் திறப்பது சம்பந்தமாக அகதிகளுக்கான ஐ நா. தூதரகம் சமர்ப்பித்திருக்கும் உடன்பாட்டில் காணப்படும் சிக்கல்கள் குறித்து அறிக்கை ஒன்றை விடுதலைப் புலிகள் சமர்ப்பிக்கவிருக்கின்றனர்.

யாழ்ப்பாணம் வந்திருக்கும் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் பிரதிநிதிகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடந்த செவ்வாயன்று இடம்பெற்ற பேச்சுக்களின் தொடராகவே இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் யாழ் வதிவிடப் பிரதிநிதி திரு. அசோக்குமார் இத்தகவலை வெளியிட்டார்.

புலிகள் சமர்ப்பிக்கும் அறிக்கை, அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் ஜெனிவா தலைமையகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

விடுதலைப் புலிகளின் அறிக்கையில் தெரிவிக்கப்படும் ஆட்சேபனைகள், யோசனைகள் குறித்து ஐ நா. தூதரகம் இலங்கை அரசுடன் கலந்தாலோசிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். (உ-3)

## மக்கள் போக்குவரத்துக்கு பாதையை திறந்து விடுக!

### இணையம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 3

''யாழ் குடாநாட்டுக்கான தரைவழிப் பாதைகள் துண்டிக்கப்பட்டுள்ளதால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் பூநகரிப் பாதையை மக்கள் போக்குவரத்துக்கு திறக்கும் நடவடிக்கையைத் துரிதப்படுத்தவேண்டும்.''

யாழ். அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அதிகாரிகளிடம் நேற்றைய சந்திப்பின்போது மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தது

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கரும்புலிகள் இசை நாடா; கலைஞர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 3

கரும்புலிகள் இசை நாடா வெளியீட்டு விழா, நேற்று பல கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது. அங்கு இசை நாடாவை உருவாக்கிய கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இசை அமைப்பாளர் கண்ணனுக்கு தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனால் வழங்கப்பட்ட தங்கப் பதக்கத்தை தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் அணிவித்தார்.

கரும்புலிகள் இசை நாடா விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினரால் உருவாக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது

கலை பண்பாட்டுக்கழக பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை தலைமையில் நடந்த இவ்விழாவை மூதற் கரும்புலி கப்டன் மில்லரின் தாயார் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

### அராலிப் பகுதி மக்களின்

## மறியற் போராட்டம் நேற்றுடன் நிறுத்தம்!

வட்டுக்கோட்டை, ஜூலை 3

தமக்கு மீண்டும் உலர் உணவு நிவாரணம் வழங்கக்கோரி, வலி - மேற்கு பிரதேச செயலகத்தின் முன்னால் மறியற் போராட்டம் நடத்திய அராலிப் பகுதியைச் சேர்ந்த இடம்பெயர்ந்த மக்கள், நேற்று அதனை முடித்துக் கொண்டனர்.

வலி - மேற்கு உதவி அரசாங்க அதிபர் செல்வி ரூபினி கனகரத்தினம் நிலைமையை விளக்கி, நிவாரணத்திற்குப் பதிலாக உணவு முத்திரையும், தொழில்பாதிப்பு நிவாரணமும் வழங்கப்படும் என்று மக்கள் பிரதிநிதிகளிடம் உறுதியளித்தார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத் தமிழர் பிரச்சினை பற்றி ஆராய்வு

சிக்காக்கோ, ஜூலை 3

அமெரிக்காவில் சிக்காகோ நகரில் உலகத் தமிழ்மொழி அறக்கட்டளை அண்மையில் சிறப்பு மாநாடு ஒன்றை நடத்தியது.

இம்மாநாட்டில் இலங்கைத் தமிழர்கள் அடைந்து வரும் இன்னல்கள், துயரங்கள் குறித்தும் ஆராயப்பட்டது.

அறக்கட்டளையின் இயக்குநர் திரு. ராம் மோகன், இணை இயக்குநர் பாபு உட்பட சுமார் 300 பேர் கலந்து கொண்டனர்.

85 நாடுகளில் வசிக்கும் சுமார் 7 கோடி தமிழ் மக்கள் அந்நிய நாடுகளில் வளர்ச்சிக்காகப் பாடுபடுவதாகவும் [illegible] (ஒ-எ)

## தொழில் அதிபர்கள் இருவர் சென்னையில் கடத்தல்

### ஈழப்போராளிகள் உட்பட 8 பேர் கைது

சென்னை, ஜூலை 3

சென்னையில் இரு தொழில் அதிபர்கள் கடத்தப்பட்டுள்ளனர். இது தொடர்பாக ஈழப் போராளிகள் மூவர் உட்பட எண்மர் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பிரபல்தாப தொழில் அதிபர்களிடம் பத்து லட்சம் ரூபா கப்பப் பணம் கேட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈச்சமோட்டை கலட்டிப்புலம்

அருள் மிகு

## ஸ்ரீஞான வைரவர் தேவஸ்தானம்

# வருடாந்த அலங்கார உற்சவ கால இலக்கியப் பேருரை

பொருள்: கம்பராமாயணம்

நிகழ்த்துபவர்: தமிழருவி திரு. த. சிவகுமாரன் (அமைப்பாளர், காரைநகர் கம்பன் கழகம், ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி)

காலம்: 03 — 07 — 1993 சனி முதல்
15 — 07 — 1993 வியாழன் வரை

நேரம்: முதல் இரண்டு நாட்களும்
5-30 — 6-30 ஏனைய நாட்களில்
6 00 — 7-00

| நாளும் | பொருளும் |
|---|---|
| 03—07—93 | அவர் தலைவர் அன்னவர்க்கே சரண் |
| 04—07—93 | நிறை எனும் அங்குசம் நிமிர்ந்தது |
| 05—07—93 | அரக்கர் பாவமும் அல்லவர் அறமும் |
| 06—07—93 | தோழமை என்றவர் சொல்லிய சொல் |
| 07—07—93 | வஞ்சமகள் வந்தாள் |
| 08-07—93 | யார்கொல் இச்சொல்லின் செல்வன்? |
| 09—07—93 | சிறியன சிந்தியாதான் |
| 10—07—93 | நீயே உலகுக்கு ஒரு சாட்சி |
| 11—07—93 | நின்னொடும் எழுவரானோம் |
| 12—07—93 | இன்று போய் நாளை வா |
| 13—07—93 | கும்பிட்டு வாழ்கிலேன் |
| 14—07—93 | உண்ணாதே உயிர் உண்ணும் ஒரு நஞ்சு |
| 15—07—93 | நாளை மௌலி சூடும் நன்னாள் |

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

- நிர்வாக சபையினர்.

அன்பளிப்பு: புதிய தர்சன் பாணகம், எழிலூர், கொழும்புத்துறை

(26325)

அருள்மிகு திருநெல்வேலி

## தலங்காவற் பிள்ளையார் கோவில்

# வருடாந்த மஹோற்சவம் 10 ஆம் திருவிழா விஞ்ஞாபனம்

03 — 07 — 1993 நிகழ்ச்சிகள்

★ மேளக் கச்சேரி:
தேவஸ்தான வித்துவான்கள்
இணுவையூர் சுந்தரமூர்த்தி குழுவினர்

★ விநாயகபுராணம் தொடர்சொற்பொழிவு

★ அலங்கரிக்கப்பட்ட அன்னப் பூஞ்சோடனையில் சுவாமி வீதி உலா வருதல்

★ இசைக் கச்சேரி:
செல்வி சாந்தி கனகரட்ணம்

★ இசையமுதம் வழங்குபவர்:
இசையரசி-திருமதி பார்வதி சிவபாதம் குழுவினர்

பட்டிமன்றம்

நடுவர்: திரு. இ. ஜெயராஜ் அவர்கள்

விடயம்:

தன் இனத்துக்காக பெரிதும்

"தியாகம் செய்த மானவீரன்"

(கம்பன் கழக பேராளர்கள் பங்கு கொள்வர்)

திருநெல்வேலி "அபர்ணாலயா" இசைக்குழுவினர் வழங்கும்

★ ராக கீதங்கள் ★

மெல்லிசை விருந்து

08 — 07 — 1993 தீர்த்தத் திருவிழா

வியாழக்கிழமை-இரவு சிறப்பு நிகழ்ச்சிகள்

பட்டிமன்றம்:

"இது இன்னமும் ஆண்கள் உலகமே"

(ஆசிரியர்கள், மாணவர்கள் பங்கு கொள்வர்)

விளம்பர அன்பளிப்பு:

ஹரன் ரெக்ஸ்ரைல்ஸ்

திருநெல்வேலி சந்தி.

[26336]

தொண்டமானாறு வெளிக்கள நிலையம்

# பொதுத்தேர்வு - ஆண்டு 13

05-07 93 அன்று நடைபெறவிருந்த பொருளியல் I, II பாடத்திற்கான பரீட்சை 12 07 93 திங்கள் நடைபெறும்.

க. சின்னத்தம்பி,
தலைவர்.

தொண்டமானாறு,
வெளிக்கள நிலையம்,
புத்தூர்.

[சி/[illegible]]

## மிருதங்க அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், ஜுலை 3

சங்கீதரத்தினம் திரு. எம். சிதம்பரநாதனின் மாணவன் செல்வன் காங்கேயன் ஆதவனின் மிருதங்க அரங்கேற்றம் இன்று சனிக்கிழமை மாலை 4-30 மணிக்கு நல்லூர் சட்டநாதர் வீதி இளம் கலைஞர் மன்றக் கலா மண்டபத்தில் யாழ்ப்பாண பிரதேசச் செயலர் திரு. க. குணராஜா தலைமையில் நடைபெறும்.

யாழ் பல்கலைக் கழக நுண்கலைத் துறைத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி பிரதம விருந்தினராகவும், மாவட்ட பிரதி ஆணையாளர் திரு. து. வைத்திலிங்கம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார்கள். [ச]

## அறிவியல் அரங்கு

யாழ்ப்பாணம், ஜுலை 3

யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் வழங்கும் முழுநிலா நாள் அறிவியல் அரங்கு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழகக் கலைப் பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை "யூகோசிலாவியாவின் உடைவும் அது ஏற்படுத்தியுள்ள அரசியல் பிரச்சினைகளும்" எனும் பொருள் பற்றியும் யாழ் பல்கலைக் கழக இந்து நாகரீகத் துறை தலைவர் கலாநிதி ப.கோபாலகிருஷ்ணன் "சிந்துவெளி நாகரீகம் ஓர் இந்துப்பண்பாட்டு நோக்கு" எனும் பொருள் பற்றியும் உரை நிகழ்த்துவார்கள் (க)

## நாளை

தமிழ் சேகிடர் ஒன்றியத்தின் வாராந்த ஆய்வரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் உள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தில் நடைபெறும். (க-111)

o o o

தென்மராட்சி கல்விக் கோட்டப் பாடசாலைகளின் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் சங்கமும் படையும் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு விழா நாளை ஞாயிறு காலை 8.30மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் பிரதேச ஆணையாளர் திரு சோ. சத்தியேஸ்வரன் தலைமையில் நடைபெறும். (ஓ-117)

o o o

அமரர் இந்துபோட் ராஜரத்தினத்தின் 109 ஆவது பிறந்ததினம் நாளை ஞாயிறு காலை 9 மணிக்கு முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் கொண்டாடப்படுகிறது.

பல்கலைப் புலவர் க. சி. குலரத்தினம் நினைவுரை நிகழ்த்துவார். பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா நிறைவாழ்வு இல்லச் சிறார்களுக்கு ஆடை வழங்குவார். யாழ் பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் சிறப்புரை ஆற்றுவார். (ச)

## புகைப்படக்கலை பயிற்சிநெறி

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் இடம்பெற்று வரும் புகைப்படக்கலை அடிப்படைப் பயிற்சி நெறி தொகுதி 6 இன் ஆரம்ப விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு பல்கலைக் கழக புவியியற்றுறை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இதில் 100 பேர் பயிற்சி பெறவுள்ளனர்.

புகைப்படக்கலை அடிப்படைப் பயிற்சியை இதுவரை 500 இற்கு மேற்பட்டோர் பயின்று வெளியேறியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## விவசாயிகளுக்கு நீரிறைக்கும் இயந்திரங்கள்

யாழ்ப்பாணம், ஜுலை 3

யாழ். மாவட்ட விவசாய கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்கு 'வாதுவ' கப்பலில் நூறு நீரிறைக்கும் இயந்திரங்கள் எடுத்து வரப்பட்டுள்ளன.

இவை ப. நோ. கூ. சங்கங்கள் [illegible] விவசாயிகளுக்கு [illegible] விக்கப்பட்டது. (ஓ-17)

அனைத்து தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின்

அங்கத்தவர்கள், நெறியாளர்கள், பணியாளர்கள் மகளிர் குழுக்கள் அனைவருக்கும்

# கரும்புலிகள் நாள் ஜூலை - 5

தமிழீழ மக்களின் சுதந்திர விடிவிற்காக, அந்நியப் படையை நம் மண்ணிலும், கடல் பரப்பிலும் இருந்து அகற்ற உலகமே வியக்கும் வண்ணம் தம் தற்கொடையினால் காற்றோடும், கடலோடும் சங்கமித்த உன்னத மறவர் குலத்துதித்த மாவீரரான இலட்சிய வேங்கைகளின் தினமான கரும்புலிகள் நாள் ஜூலை 5இல் அவர்களின் தியாகத்தை உணர்வுபூர்வமாக நினைவு கொள்ளும் வகையில் உரிய இடங்களில் நடைபெறும் பொது நிகழ்வுகளில் கலந்து சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இந்நாளில் சங்கங்களின் மது விற்பனைக் கிளைகளில் கொள்வனவு நடவடிக்கைகளை மட்டும் மேற்கொள்ளும்படி அறியத் தருகின்றோம்.

பொது முகாமையாளர்,
வடமாகாண தெ.ப.பொ.கூ. ச. சமாசம்,

இல. 4?9, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். (சி-5425)

# மீண்டும் ஞாபகமூட்டுகின்றோம்!!

இன்று ஆரம்பமாகும் வகுப்புகள்

காலை 8 மணி

ஆண்டு 9, 10

## O/L பகல் நேர வகுப்பு

## O/L மீட்டலும் வினா-விடையும்

காலை 10-00 மணி

## A/L 94, 95

விஞ்ஞானப் பிரிவு

மதியம் 1-30 மணி

## A/L 94, 95

கலை, வர்த்தகப் பிரிவு

# நவகைடன்ஸ்

அருச்சுனா வீதி, ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்

[சி-5353]

ஆவரங்கால்

## மத்திய பாலர் பாடசாலை 18ஆவது

# வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி

காலம்: 04 - 07 - 1993 ஞாயிறு பிற்பகல் 2 மணி

இடம்: மேஜர் அல்பேட் கலையரங்கு முன்றில்

பிரதம விருந்தினர்; செல்வி செ. ஜெனனி, (செஞ்சோலைப் பொறுப்பாளர்)

கௌரவ விருந்தினர்: செல்வி க. மாலினி (மகளிர் புனர்வாழ்வுப் பொறுப்பாளர்)

திருமதி கி. பாஸ்கரன், (வலி-கிழக்கு உள்ளூராட்சி விசேட-ஆணையாளர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

நன்றி!

இங்ஙனம்:
பாலர் கல்விக்குழு ஆசிரியைகள்,
பாலர்கள்.

ஆவரங்கால் மேற்கு,
19 - 06 - 1993.

விளம்பர அன்பளிப்பு;

VINAYAKAR STHABANAM,

விநாயகர் ஸ்தாபனம்,

No. 19, Jaffna Point Pedro, Puttur.

(6306).

ஸ்ரீ சாயி ராம்

# கண்ணீர் அஞ்சலி

## சண்முகம் புஸ்பராசா

சண்முகம் புஸ்பராசா (செயலாளர், ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையம் சாவகச்சேரி) நேற்று 02-07-93 பகவான் திருவடி சேர்ந்தார்.

அன்னாரது பூதவுடல் இல. 56, அத்தியடி புதிய வீதி, யாழ்ப்பாணத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. அன்னாரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலைய அடியார்கள்.

சாவகச்சேரி,
02-07-1993.

(26343)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கல்விப் பெறுபேறுகளுக்கு அப்பால்

# புறநடவடிக்கைகளில் சாதனை புரிவோருக்கு மேலதிக புள்ளிகள்

## பல்கலைக்கழக அனுமதிக்கு புதிய திட்டம்

கொழும்பு, ஜூலை 3

1992 - 93 கல்வியாண்டில் இருந்து பல்கலைக்கழக அனுமதி வழங்கும் போது விளையாட்டு, சங்கீதம், நாடகம், ஓவியம் போன்ற துறைகளில் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் சிறந்த தகைமைகளை வெளிக்கொணர்ந்தவர்களுக்கு மேலதிக புள்ளிகள் வழங்கப்படும்.

இதற்கான திட்டம் ஒன்றை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு 1994 ஆம் ஆண்டு முதல் அமுல் நடத்த விருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

கலை, வர்த்தகம், பௌதிக விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம் ஆகிய துறைகளில் ஐந்து சதவீதமும், ஏனைய துறைகளில் இரண்டு சதவீதமும் இத்தகையோருக்கு என பல்கலைக்கழக அனுமதிக்கான புதிய திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படும் என்று பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அறிவித்துள்ளது.

சாதாரணமாக இடம் பெறும் பல்கலைக்கழக அனுமதிக்கான தெரிவு முடிவுற்றதும், புதிய திட்டத்தின் கீழ் தகுதி பெறும் மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்களை மானிய ஆணைக்குழு பத்திரிகைகள் மூலம் தனியாகக் கோரும் என்று மானிய ஆணைக்குழுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

தத்தமது மாவட்டத்தில் நிர்ணயிக்கப்படும் வெட்டுப் புள்ளிகளிலும் பார்க்க, பத்து சதவீதம் குறைந்தளவு மதிப்பெண் (Marks) பெறுவோர் இந்த ஒதுக்கீட்டின் கீழ் அனுமதியைப் பெறமுடியும்.

இந்தத் திட்டத்தின் கீழ் அனுமதி பெறுவோரைத் தெரிவு செய்வதற்காக —

விசேட புள்ளி (Points) அட்டவணை ஒன்றையும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அறிவித்திருக்கிறது.

இந்த அட்டவணையின் பிரகாரம் —

ஒவ்வொரு மாணவனும் பாடசாலை, மாவட்ட மற்றும் தேசிய மட்டங்களில் — கல்விக்குப் புறம்பான துறைகளில் — ஆற்றிய பங்களிப்புக்கு தனித்தனியாக புள்ளிகள் வழங்கப்படும்.

பாடசாலை மாணவ முதல்வர், பாடசாலை முதலாம் அணியின் தலைவர், பாடசாலை சிரேஷ்ட இலக்கிய மன்றங்களின் தலைவர் — செயலாளர் பதவிகள் போன்றவற்றுக்கு மூன்று புள்ளிகளும் —

தேசிய மட்ட நிகழ்வுகளில் முதல் மூன்று இடங்களில் ஒன்றைப் பெற்றமைக்கு 16 புள்ளிகளும் —

மாவட்ட மட்ட நிகழ்வுகளில் முதல் மூன்று இடங்களில் ஒன்றைப் பெற்றமைக்கு 12 புள்ளிகளும் இந்த அட்டவணையின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளன.

மாணவரின் ஒவ்வொரு புறநடவடிக்கைக்கும் தனித்தனி புள்ளிகள் இந்த அட்டவணையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

அதன்படி, ஒவ்வொரு மாவட்டத்திலும் வெட்டுப் புள்ளியிலும் பார்க்க பத்து வீதம் குறைந்த மதிப்பெண்களைப் பெற்ற மாணவர்களிடையே —

தமது புறநடவடிக்கைகள் மூலம் அதிக புள்ளிகளைப் பெறுவோர் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்படுவர். (உ-எ)

## மேன்முறையீட்டை சமர்ப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜூலை 3

யாழ் கல்வித் திணைக்களத்தினால் கடந்த முதலாம் திகதி முதல் வடமராட்சி, தென்மராட்சி, நாவற்குழி ஆகிய பகுதிகளுக்கு பொது இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களில் பாதிக்கப்பட்டவர்கள் தமது மேன்முறையீட்டினை எதிர்வரும் 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் யாழ் கல்வித் திணைக்களத்தில் சமர்ப்பிக்கலாம் என்றும் — மேன்முறையீட்டு சபை அவற்றைப் பரிசீலனை செய்யும் என்றும் அறிவிக்கப்படுகின்றது. (த)

## ஆலய உற்சவங்கள்

நல்லூர் ஸ்ரீ மனோன்மணி ஆலய தீப இசை அரங்கில் இன்று சனிக்கிழமை மாலை 6-30 மணிக்கு பண்ணிசையும் எம். இராமநாதனின் மெல்லிசை நிகழ்ச்சியும் நடைபெறும். (க)

o o o

வட்டுக்கோட்டை மூன்றாம் பனை ஞானவயிரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவ பூர்த்தியும், சங்காபிஷேகமும் இன்று சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் நடைபெற்று வயிரவப்பெருமான் வீதியுலா வருவார். (க-12)

o o o

கிளாலி களிவெளி அம்மன் ஆலய வருடாந்தப் பொங்கல் உற்சவம் இன்று சனிக்கிழமை பகல் ஆரம்பமாகும் இரவு "சத்தியவான் சாவித்திரி நாடகம் நடைபெறும். (க-117)

o o o

யாழ். அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் கோவிலில் இன்று சனிக்கிழமை பூரணை உற்சவமும் திருவிளக்குப் பூசையும் இடம்பெற்று அம்பாள் உள்வீதியுலா நடைபெறும். (க)

o o o

சங்கானை கூடத்து மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தின் 10ஆம் நாளாகிய இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் அம்பாளுக்கு சங்காபிஷேகமும், நவசக்தி அர்ச்சனையும் நடைபெறும். மாலை திருவூஞ்சலும் அதனைத் தொடர்ந்து மின்னொளியால் அலங்கரிக்கப்பட்ட மஞ்சத்தில் அம்பாள் திருவுலாவும் இடம்பெறும். (க)

o o o

யாழ். வண்ணை, குளங்கரை ஸ்ரீ காமாட்சி அம்பாள் (நாச்சிமார் கோவில்) தேவஸ்தானத்தில் திருவிளக்குப் பூசை ஆரம்பமாகி இருபது வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு இன்று சனிக்கிழமை மாலை 4-30 மணிக்கு விசேட பூசை, ஆராதனைகள் நடைபெறும். (க-51)

o o o

ஈச்சமோட்டை கலட்டிப் புலம் ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டு ஈச்சமோட்டை ஸ்ரீ ஞானவைரவர் இந்து இளைஞர் மன்ற செயலாளர் பே. மோகனச்செல்வன் தலைமையில் இன்று சனிக்கிழமை மாலை 6 மணி முதல் கூட்டுப் பிரார்த்தனை ஆலய மண்டபத்தில் நடைபெறும். (த-17)

## மாட்டு வண்டி சவாரிப் போட்டி

அளவெட்டி விநாயகர் விளையாட்டுக் கழக வளர்ச்சி நிதிக்காக மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணிக்கு சுன்னாகம் கந்தரோடை சவாரி மைதானத்தில் நடைபெறும். [க-89]

## குரு பூர்ணிமா

யாழ்ப்பாணம், ஜூலை 3

குரு பூர்ணிமா தினம் இன்று சனிக்கிழமை பல இடங்களிலும் சிறப்பாகக் கொண்டாடப்பட உள்ளது.

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா நிலையம், திருநெல்வேலி சேர். பொன் இராமநாதன் வீதியில் உள்ள சேவா நிலைய மண்டபத்தில் குருபூர்ணிமாவை ஒட்டி விசேட நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ளது.

அதிகாலை 4-45 மணி தொடக்கம் நண்பகல் 1-15 மணி வரை நடைபெறும் நிகழ்ச்சிகளில் கலாநிதி அ. வே. மணிவாசகரின் சிறப்புச் சொற்பொழிவும் அடங்கும்.

o o o

பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் குருபூர்ணிமாவுடன் சுவாமி விவேகானந்தரின் சிக்காகோ நூற்றாண்டு விழாவும் கொண்டாடப்படும்.

இலங்கை வங்கி பருத்தித்துறை கிளையின் முகாமையாளர் திரு.வே.தில்லைநாதன் தலைமையில் முற்பகல் 9மணி முதல் நண்பகல் 12-30 மணி வரை நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

o o o

யாழ். திவ்ய ஜீவன சங்கத்தின் ஆதரவில் நல்லூர், பருத்தித்துறை வீதியில் உள்ள சங்க மண்டபத்தில் குரு பூர்ணிமா தினம் அனுஷ்டிக்கப்படும். இன்று காலை 8மணி முதல் 10 மணி வரை சாதனா நாளாகக் கொண்டாடப்படும். பூசை, பஜனை, [illegible] பெறும். [illegible]

---

## மிருதங்க அரங்கேற்றம்



சங்கீதரத்தினம் திரு. M சிதம்பரநாதன் அவர்களிடம்

மிருதங்க இசை பயின்ற எமது புதல்வன்

செல்வன்

**காங்கேயன் ஆதவன்**

அவர்களின்

**★ மிருதங்க அரங்கேற்றம் ★**

காலம்: இன்று 03 - 07 - 1993 சனிக்கிழமை மாலை 4—30 மணி

இடம்: இளங்கலைஞர் மன்றக் கலாமண்டபம் (சட்டநாதர் வீதி, நல்லூர்)

தலைவர்: திரு. க. குணராஜா அவர்கள் (பிரதம செயலர், யாழ்ப்பாணம்)

பிரதம விருந்தினர்: பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள். (தலைவர் - நுண்கலைத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

சிறப்பு விருந்தினர்: திரு. து. வைத்திலிங்கம் அவர்கள் (மாவட்டப் பிரதி ஆணையாளர்)

### இசை அரங்கில்:

செல்வன் ஆதவனுடன்-
சங்கீதபூஷணம் S. பத்மலிங்கம் — பாட்டு
இசைஞான திலகம்:
திரு. உ. இராதாகிருஷ்ணன் — வயலின்
கலாவித்தகர்:
செல்வன் க. கண்ணதாசன் — கடம்
வித்துவான் திரு. N. சண்முகலிங்கம் — தம்புரா
ஆகியோர் இணைகிறார்கள்.

அன்புடன் அழைக்கின்றோம்.

திரு. இ. காங்கேயன்,
மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்,

திருமதி ச. காங்கேயன்,
யா/மங்கையர்க்கரசி வித்தியாலய அதிபர்.

36/10, மணற்றரை வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். ([illegible])

---

சரணம் ஐயப்பா

## வாழ்த்துகின்றோம்



**சண்டிலிப்பாய் வேவிற்பதி**
**ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனார் தேவஸ்தான**

தேர்த் திருப்பணியை குறுகிய காலத்தில் நிறைவு செய்ய முன்னின்றுழைத்தமைக்காக தேர்த்திருப்பணிச்சபைத் தலைவர் வேதவித்தகர் சிவஸ்ரீ. நா. சர்வேஸ்வரக் குருக்கள் அவர்களால் 'அறநெறிக்காவலர்' எனப் பட்டமளித்து கௌரவிக்கப்பட்ட, —

செஞ்சொற்காவலன், திரு. இ. ஜெயராஜ் அவர்களால் பொன்னாடை போர்த்திப் பாராட்டப்பட்ட —

**திரு. த. கோவிந்தசாமி அவர்களை**

வாழ்த்துகின்றோம்.

அவர் பணி சிறப்புடன் தொடர

ஸ்ரீ ஐயப்பனின் பாதங்களில் பணிகின்றோம்.

— அன்பர்கள் —

(26330)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

திருநெல்வேலி மருத்துவக் கல்லூரிச் சுற்றாடலில் வீடு விற்பனைக்கு உண்டு. பொ. காங்கேயன், சட்டத்தரணி. [26282]

வெள்ளைப் பேட்டுக்குஞ்சு, பிறவுண் சேவல் குஞ்சு உடன் விற்பனைக்குண்டு. 'மல்லிகா பதி', மானிப்பாய். (26308)

## இலவச திருமண சேவை

32, வயது, மிருகசீரிடம், செவ்வாய் 4, கனடாவிலுள்ள மணமகனுக்கு மணப்பெண் கனடாவில் விரும்பத்தக்கது. சகல மணமக்களுக்கும், ஞாயிறு காலையில் சந்தியுங்கள். து. விமலா, இலவச திருமணசேவை, யாழ். நாச்சிமார் கோவிலடி. [26315]

## கைச்சங்கிலி யாருடையது?

காங்கேசன்துறை வீதியில் இருந்து ஒரு கைச்சங்கிலி கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். தொடர்பு: சி கண்ணன், இல: 83, இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம். (26329)

## சேவை

போர்க்காலச் சூழ்நிலையால் விதவைகள் ஆக்கப்பட்ட விதவைகளின், உதவியற்றோரின் - O/L பரீட்சை 1993க்கு தோற்றும் முப்பது மாணவர்களுக்கு வேதனமின்றி கணிதம், சமூகக் கல்வி, விஞ்ஞானம், தமிழ் ஆகிய பாடங்களை ஒரே இடத்தில் வைத்து கற்பிக்க சேவை மனப்பான்மையுள்ள A/L சித்தியடைந்தோர், ஆசிரியர்கள், இளைப்பாறிய ஆசிரியர்கள் தொடர்பு கொள்ளவும். இல; 537, C/o உதயன். [26323]

## புலமைப்பரிசில்

பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்கள் ஒவ்வொரு ஞாயிறும் வெளியிடப்படும். Bond, யாழ்ப்பாணம். பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம் S, K. சாமி நெல்லியடி, பளிங்கு சாவகச்சேரி ஆகிய இடங்களில் பெற்றுக் கொள்ளலாம். (26339)

## வெளிவந்துவிட்டது

வரதர் கதைமலர்-1 அனுவை நாகராஜன் எழுதிய 'அவன் பெரியவன்' சிறுவர்க்கான சுவையான கதைநூல் வெளிவந்துவிட்டது. ரூபா 12/-. விற்பனையாளருக்கு கழிவுண்டு. ஆனந்தா புத்தகசாலை, 226, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (சி/5351)

## வினாத்தாள் (ஆண்டு-4 5)

புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுத்தரும் நிறுவனத்தால் நடத்தப்படும் ஆண்டு - 4, 5 மாதிரி வினாத்தாள் 4-7-93 ஞாயிறு வெளியிடப்படும். விடையளித்துத் தந்தால் திருத்திக் கொடுக்கப்படும். பதிவு செய்யவும்: புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (26307)

## வேப்பம் விதை

வேப்பம் விதை வாங்குகிறோம். மில்க்வைற். (சி/5415)

## இந்திய அமைச்சர் இலங்கை விஜயம்

இலங்கை – இந்திய கூட்டு ஆணைக்குழுவில் கலந்து கொள்வதற்காக இந்திய வெளியுறவு அமைச்சர் தினேஷ் சிங் அடுத்த மாதம் கொழும்பு வரவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---


LUXINTENEBRIS

# JAFFNA ENGLISH ACADEMY

**SPOKENESOL (Spoken English for Speakers of other Languages)**

The learners will be taught to cope with informing, describing, narrating, instructing, eliciting, expressing, reporting, expanding, developing, clarifying, rephrasing et cetera. These situations cover the common demands of everyday life so that they can handle oral interaction with adequate confidence

There are two versions of our courses:

One aimed at young people and adults and one for young learners between about 9 and 13 years of age.

Duration: 4 Months

**JUNIOR BATCH** — (Between 9and 13 years of age)

Weekends — 3to 4-30 p.m.
Commencement— 04 — 07 — 1993

**SENIOR BATCH** — (Adults)

Weekends — 4 30 to 6p.m.
Commencement — 04 — 07 — 1993

Mondays / Wednesdays — 4 30 to 6p.m.
Commencement — 05 — 07 — 1993

Lectures — By a panel of suitably qualified & experienced teachers of English.

**ELOCUTION**

Aimed at training the students to provide excellent practice in distinct articulation.

Duration: 3 Months
Weekends — 8 to 9 a.m.
Commencement — 04 — 07 — 1993

**NATIONAL CERTIFICATE IN ENGLISH (N. C. E. JULY 93 Examination)**

Weekend Classes — 3to 4-30 p.m.
Commencement — 19 — 06 — 1993
Lectures: Kandiah Navarendran

**ENGLISH FOR SPEAKERS OF OTHER LANGUAGES (E. S. O. L)**

English Language is taught right from the beginning to achieve high proficiency in written English.

Weekends — 1 to 2-30 p.m
Commencement — 04 — 07 — 1993
Lectures: Kandiah Navarendran

**TEST OF ENGLISH AS A FOREIGN LANGUAGE (TOEFL)**

The syllabusis designed to evaluate the English proficiency of persons whose native language is not English.

Weekend Batch — 8 to 10a m
Tuesday/Friday Batch — 4-30 to 6p m.
Commencement — 02 — 07 — 1993
Lectures: Kandiah Navarendran

**ENGLISH AND BUSINESS COMMUNICATIONS**

Ideal for those studying at school or college or university before entering employment and for those acquiring or updating skills in employment, after a break in employment or when seeking a career change. The syllabus comprises the communication process, lines of communication, oral presentation, delivery, using visual aide, interview, communication barriers, written communication, graphic communication group discussion, briefing sessions, public relations, social aspects of communications, mass media communications customer relations, et cetera.

Duration: 6 Months
Tuesdays / Fridays — 3 to 4-30 p. m.
Commencement — 02–07—1993
Lectures: Kandiah Navarendran

**HIGHER ENGLISH COURSE**

The syllabuses are not intended to be exhaustive. The G. C. E. (Advanced Level) Syllabus will also be covered. An ideal course for those who desire to acquire updating skills In English Language & Literature.

Duration: One Year
Weekends — 4-00 ot 6-00 p m.
Commencement — 04 — 07 — 1993
Lectures: Kandiah Navarendran

9, Rakka Lane,
Chundikuli, Jaffna.

(C/5369)


---

வலி. வடக்குப் பிரதேச சபை
காங்கேசன்துறை (மல்லாகம்)

## கேள்வி விளம்பரம்

உதயன் பத்திரிகையில் 26 – 06 – 1993 ஆம் திகதி பிரசுரமாகிய கேள்வி விளம்பரம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்பவத அறியத் தருகின்றேன்.


கா. சந்திரநாசா,
விசேட ஆணையாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை.

பிரதேச சபை அலுவலகம்,
96, யாழ் வீதி, மல்லாகம்.
01 - 07 - 1993.

(சி-5350)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 07 — 08 — 1954

மறைவு: 14 — 07 — 1992

அமரர்

### சிவசுப்பிரமணியம் குணசேகரம்

(ரகு)
(வல்வெட்டித்துறை)

திதி: 03 — 07 — 1993

ஆண்டொன்று சென்றும்
ஆறவில்லை எம் துயரம்
மின்னாமல் முழங்காமல் விழுந்ததே
இடி எம்மேல்
தீராத நோயென்று வாடவில்லை
முதுமை உன்னை அடையவில்லை
இளம் வயதில் சடுதியாக
நீ மறைந்தது விதியா? சதியா?
பொய்யுடம்பை விட்ட ஆத்மா
சாந்தியடைந்து இறைபலம் பெற்று
என்றென்றும் எமக்குத் தெய்வமாகி
வழிகாட்டுவீராக!!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

தாய், மனைவி, மகள்,
சகோதரர்கள், மாமி.

சுப்பிரமணியன்-
சோடாக் கம்பனி,
வல்வெட்டித்துறை.

ராஜு ஸ்ரோர்ஸ்,
67, 69, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(6802)

---

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்: 16 — 09 — 1973

ஆண்டவன் அடியில்: 26 — 06 — 1991

### செல்வி வர்ணலா செல்லத்துரை

திதி: 03 — 07 — 1993

எங்கள் குலவிளக்கே, வர்ணலாவே! ஈராண்டுகள் ஓடிமறைந்தாலும், உன் இனிய நினைவுகளும் சிரித்த முகமும் என்றும் மறையாது.

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உமது பிரிவால் துயருறும்;
ஐயா, அம்மா,
அண்ணாமார்: மகேந்திரன், யேந்திரன்,
அக்காமார்: வசந்தி, வதனி, வனிதா, வத்சலா.
தம்பி: சுவிந்திரன்.

'பார்லேன்',
தெல்லிப்பழை.

(5978)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### வவுனியா மீது ஏன் இந்தக் கண்?

வவுனியா விமானத் தள விஸ்தரிப்புக்கெனச் சுவீகரிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் தமிழர்களை வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டிருக்கிறது.

அரசு சுவிகரித்த பகுதியின் வடகிழக்குத் திசையில் உள்ள கோயில் புதுக்குளம், தச்சன்குளம் ஆகிய பகுதிகளில் வாழும் தமிழர்களை அவர்களது குடியிருப்புகளை விட்டு உடனடியாக வெளியேறுமாறு இராணுவம் அச்சுறுத்தி உள்ளது என்பது தகவல். ஏற்கனவே சுவீகரித்த காணிகளை விட அத்திசையில் மேலும் குறிப்பிட்ட நிலப்பரப்பை தனதாக்கிக் கொள்வதற்கு இராணுவம்-அரசு-நடவடிக்கை எடுத்து வருகிறது.

வவுனியாவில் விமானத் தளம் என்பது தமிழர்களின் வன்னிப் பிரதேசத்தில் இராணுவ ஆதிக்கத்தை வலுப்படுத்துவதற்கான ஓர் அத்திவாரமாகவே கருதப்பட்டது. இற்றைக்குச் சுமார் பதினைந்து வருடங்களுக்கு முன்னரே வவுனியாவில் விமானத் தளம் அமைக்கும் எண்ணம் இராணுவத்திடம் கருக்கொண்டிருந்தது. வடக்கு – கிழக்குப் பிரதேசத்தின் மத்தியில் அமைந்துள்ள வவுனியாவில் வசதிகள் நிறைந்த பலம் மிகுந்த இராணுவத் தளம் ஒன்று தேவை என்று அரசு அப்போதே திட்டமிட்டது. அதன் முன்னோடியே விமானத்தளம்.

விமானத் தளத்தை அதிவேகமாக அமைத்து விடுவது என்ற திட்டத்துடன் அவ்வேளை தமிழர்களுக்குச் சொந்தமான நிலபுலங்களை அரசு அடாத்தாகச் சுவீகரித்தது. அதற்குப் பலத்த எதிர்ப்புக் கிளம்பியது. அதனையும் பொருட்படுத்தாது செயற்பட்ட அரசு, ஏதோ காரணங்களுக்காக விமானத்தளத்தை விரிவுபடுத்தும் வேலையை ஒயப்போட்டது.

தமிழர் பிரதேசங்களின் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கு, அப்பகுதிகளில் இராணுவ கேந்திர நிலையங்களைப் பலப்படுத்துவது அத்தியாவசியம் என்று கருதி 1983ஆம் ஆண்டின் பின்னர் மீண்டும் இது விடயத்தில் படைத்துறையினர் அக்கறை காட்டினர்.

மீண்டும் தமிழர்களுக்குச் சொந்தமான பெரும் நிலப்பரப்பு 1985, 86 களில் சுவீகரிக்கப்பட்டது. அந்தக் காணிகளுக்கு நஷ்டஈடு வழங்கப்படும் என உறுதி கூறப்பட்டது. ஆனால் அது வெறும் வாய்ச் சொல்லாகவே இருக்கிறது.

இத்தனைக்கும் பின்னர், விமானத்தள விஸ்தரிப்புக்காக தமிழர் காணிகளை மேலும் சுவீகரிப்பதும், அப்பகுதிகளில் குடிவாழும் தமிழர்களை அச்சுறுத்தி வெளியேற்றுவதும் அரசின் அப்பட்டமான அடாவடித்தனமன்றி வேறில்லை.

வவுனியாவை அபிவிருத்தி செய்வது என்ற போர்வையில் சிங்களவர்களை தமிழ்க் கிராமங்களில் குடியேற்றும் சூழ்ச்சியில் அதிதீவிரமாகச் செயற்பட்டு வரும் அரசு —

விமானத் தளத்தை விஸ்தரிப்பது என்ற பேரில் தமிழர்களை வெளியேற்ற முனைகிறது. வவுனியாவை மற்றும் ஒரு திருகோணமலையாக்கி, அதன் இனவிகிதாசாரத்தை மாற்றிவிட முனைகிறது.

வவுனியா மாவட்டத்தை சிங்களவர் மாவட்டமாக்கிவிடும் திட்டத்தின் ஓர் அங்கமே அபிவிருத்தி என்ற போர்வையில் நடக்கும் வேலைகளும், சிங்களக் குடியேற்றங்களும். அவ்வாறு செய்வதன் மூலம் வவுனியாவில் பலம் கொண்ட இராணுவத்தளம் ஒன்றை உருவாக்குவதற்கு அனுகூலமாக இருக்கும் என்று இராணுவம்—அரசு கருதுகிறது.

வன்னி மீது இராணுவ ஆதிக்கம் செலுத்தவும், வடக்கினை இராணுவ மேலாதிக்கத்துக்கு உட்படுத்தவும் வவுனியாவை ஒரு கேந்திர நிலையமாக்கும் அரசின் சதிக்குப் பலியாக இருப்பவர்கள் தமிழர்களே. பறிபோவதும் தமிழர் நிலங்களே. இவை எல்லாம் சிங்களப் பேரினவாத அரசின் சனநாயகக் குணாம்சங்களில் சிலவாகும்! இன்னும் இப்படி எத்தனை எத்தனை பேரினவாத ''விழுமியங்கள்'' புதிதாக வெளியே வருமோ...?

---

யாழ். மாவட்டத்தில்

## மாவின் மொத்த விலை ரூ. 12.65 ஆக உயர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 3

மாவின் மொத்த விற்பனை விலை ஒரு கிலோவுக்கு 12 ரூபா 65 சதமாக உயர்த்தப்பட்டுள்ளதாக யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கொழும்பில் மாவின் விலை உயர்த்தப்பட்டதை அடுத்து இங்கும் மாவின் மொத்த விலை உயர்த்தப்பட்டுள்ளதாகவும் —

சில்லறை விலை பற்றி இன்னும் முடிவு செய்யப்படவில்லை என்றும்— மேலும் தெரிவிக்கப்பட்டது.

மொத்த விலையின்படி முன்னர் ஒரு கிலோ மா 11 ரூபா 30 சதத்துக்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. (ஒ-3)

---

கெற்பெலி, நாவற்குழி, பரு.கிழக்கு

## ஆசிரியர் மேன் முறையீடு குறித்துபணிப்பாளர்விளக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 3

கெற்பலி, நாவற்குழி, பருத்தித்துறை கிழக்கு பகுதிகளுக்கு கடந்த முதலாம் திகதி இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள் தமது மேன்முறையீடுகளை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு முன்னர் கல்வி அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும்—

மேன்முறையீடுகள் அன்றே பிற்பகல் 2 மணிக்கு கூடும் மேன்முறையீட்டுச் சபையால் பரிசீலிக்கப்படும் என்றும்— யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

யாழ் மாவட்டத்துக்குவெளியேயும், தீவகத்தில் நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு ஆகிய பகுதிகளிலும் இரண்டாண்டுகளுக்கு மேல் சேவை செய்யாதவர்களே மேற்படி இடமாற்றத்தைப் பெற்றுள்ளனர் என்றும்—

இந்த நிபந்தனைக்கு அடங்காத அல்லது திருமணமான பெண் ஆசிரியர்கள் மட்டுமே மேன்முறையீடு செய்யலாம் என்றும்— பிரதேச கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஒ-3-118)

(முன்னர் வந்த செய்தி 3 ஆம் பக்கத்தில்)

---

## விளையாட்டு நிகழ்வுகள்

சங்கானை ஜுபிற்றர் விளையாட்டுக் கழகம் டாக்டர் எஸ். இராஜேந்திரம் ஞாபகார்த்த வெற்றிக்கேடயத்திற்காக நடத்தும் கிரிக்கெட், கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

**கிரிக்கெட்**

★ முற்பகல் 8.30 மணி:- சுட்டு. சிவன் ''ஏ'' அணி எதிர் ஸ்கந்தா வி. க ''பி'' அணி

★ முற்பகல் 10 மணி:- வளர்மதி வி. க. ''ஏ'' அணி எதிர் ஸ்கந்தா வி. க. ''ஏ'' அணி

**கரப்பந்தாட்டம்**

★ பிற்பகல் 2.30 மணி:- வாலையம்மன் வி. க. பச்சை அணி எதிர் சரஸ்வதி ''ஏ'' அணி

★ மாலை 4 மணி:-தொண்டமானாறு கலைவாணி ''ஏ'' அணி எதிர் வை.எம்.எச் ஏ. வி. க. ''ஏ'' அணி

o o o

கல்லூரிகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டித் தொடரில் — 17 வயதுப் பிரிவில் — இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ மானிப்பாய் இந்து எதிர் ஸ்கந்தா— மானிப்பாய் இந்து மைதானம்.

★ கொக்குவில் இந்து எதிர் யாழ் மத்திய கல்லூரி — கொக்குவில் இந்து மைதானம்.

★ கனகரத்தினம் ம.ம.வி. எதிர் சென். பற்றிக்ஸ் — கனகரத்தினம் ம. ம. வி. மைதானம்.

இந்த ஆட்டங்கள் இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

o o o

யாழ். வைக்கிங்ஸ் விளையாட்டு கழகத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்டு வரும் விலகல் முறை உதைபந்தாட்ட போட்டித் தொடரில் இன்று மாலை அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறும் இறுதி ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ 3.30 மணி:- மூன்றாம் இடத்தைப் பெறும் அணியை தெரிவு செய்வதற்கான ஆட்டம்:- சென்.அன்ரனீஸ் எதிர் பாடுமீன் ''பி'' அணி

★ 4 30 மணி:- இறுதியாட்டம்— சென். மேரிஸ் எதிர் பாடுமீன் ''ஏ'' அணி

இன்றைய நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக சென். பற்றிக்ஸ் கல்லூரியின் முன்னாள் அதிபர் வண பிதா பிரான்சிஸ் மைக்கல் ஜோசப்அடிகளாரும், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் திரு. எஸ். ரி. கணநாதனும் கலந்து கொள்வர். (உ-17)

o o o

யாழ். பல்கலைக்கழக விளையாட்டுப் பேரவை நடத்தும் —ஆண்களுக்கான— 35 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டி நாளை காலை 6 மணிக்கு ஆரம்பமாகும்.

## இன்று

பகவான் ஸ்ரீசத்யசாயிபாபா சனாதன சாரதியாக சங்கீர்த்தன தேர்த் திருவுலா இன்று சனிக்கிழமை யாழ். நகர்ப் பகுதியில் நடைபெறும்.

மாலை 4 15மணிக்கு நாச்சிமார் கோவிலடி பிரசாந்தி நிலையத்தில் ஆரம்பமாகும் திருவுலா யாழ். நகர வீதிகள் ஊடாகச் சென்று மாலை 6.15 மணிக்கு கோண்டாவில் குமரகோட்டத்தைச் சென்றடையும்.

இத்தேர்த்திருவுலாவை முன்னிட்டு யாழ் இந்துக்கல்லூரியில் மதிய போசனம் வழங்க சாயி அன்பர்கள் ஏற்பாடு செய்துள்ளனர். (க-15)

o o o

கொழும்புத்துறை சனசமூக நிலையத்தின் கலை இலக்கிய வட்டத்தின் மாதாந்தப் பௌர்ணமிக் கலைவிழா இன்று சனிக்கிழமை மாலை 6 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறும். (க-30)

o o o

யாழ்ப்பாணம் கந்தர்மடம் ஸ்ரீ சிவகுருநாத குருபீட வேதாந்த மடத்தில் நடைபெறும் பூரணையின நிகழ்வில் இன்று சனிக்கிழமை ''அன்பின் திறம்'' எனும் பொருளில் யாழ். பலகலைக்கழக இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

o o o

சுன்னாகம் மயிலணி பகவான் ஸ்ரீ சத்தியசாயி பஜனை நிலையத்தில் இன்று மாலை 4 மணிக்கு, வருடாந்த குரு பூரணை தின விழாவை முன்னிட்டு விசேட பஜனை,சொற்பொழிவு ஆகியன நடை பெறும். (ஒ-89)

### பாடசாலைகளில்

யாழ்ப்பாணம் ஞானக் குழந்தை இல்லம் பாலர் பாடசாலையினதும், கலைமகள் பாலர் பாடசாலையினதும் இரண்டாவது வருடாந்த விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு செல்வி வசந்தி அருட்பிரகாசம் தலைமையில் யாழ். இந்துக் கல்லூரி விளையாட்டு அரங்கில் நடைபெறும்.

o o o

தாவடி மத்திய சனசமூக நிலையத்தின் விநாயகர்பாலர் பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் தாவடி மத்திய சனசமூக நிலையத்தின் செயலாளர் திரு. ந. பகீரதன் தலைமையில் இன்று நடைபெறும். (ஒ-152)

o o o

சுன்னாகம் திருஞானசம்பந்தர்வித்தியாசாலைஇல்லமெய்வல்லுநர் போட்டி அதிபர் திருவி ஏரம்பமூர்த்தி தலைமையில்இன்றுபி பகல் 1 மணிக்கு நடைபெறும். (ஒ - 152)

---

## 'குமாரி' மீண்டும் சேவையில்

யாழ்ப்பாணம், ஜூலை 5

இடைநிறுத்தப்பட்டிருந்த 'குமாரி' கப்பல் சேவையை மீண்டும் நடத்த புனர்வாழ்வு அமைச்சு முடிவு செய்துள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

வடக்கே அத்தியாவசியப் பொருள்களை ஏற்றி வரும் பணியில் ஈடுபட்ட 'குமாரி' கப்பல் சேவை கடந்த மாதம் முதல் இடை நிறுத்தப்பட்டிருந்தது தெரிந்ததே

மீண்டும் இக்கப்பலை வடக்கே சேவையில் ஈடுபடுத்த புனர்வாழ்வு அமைச்சு ஏற்பாடு செய்துள்ளதாகவும்—

இந்தக் கப்பலில் 3ஆயிரத்து 200 மெற்றிக் தொன் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை இங்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்—

பெரும்பாலும் எதிர்வரும் 10 ஆம் திகதி இக்கப்பல் பருத்தித்துறைக்கு வந்து சேரும் என்றும் — செயலகத்துக்கு கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

'குமாரி'யில் இடம்பெயர்ந்தோர் நிவாரணத்துக்கான உணவு முத்திரைகளும் எடுத்து வரப்படவிருக்கின்றன. (ஒ 3)

---

## ஜெயலலிதாவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக் கூடாது

### உயர் நீதிமன்றம் உத்தரவு

சென்னை, ஜூலை 3

முதலமைச்சர் ஜெயலலிதாவை சட்டசபை உறுப்பினர் பதவியில் இருந்து விலக்கக்கோரி சமர்ப்பித்த மனு குறித்து விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று சென்னை உயர் நீதிமன்றம் தேர்தல் ஆணையாளர் டி.என். சேஷனுக்கு உத்தரவிட்டது.

இம்மனுவை ஜனதாக் கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி தேர்தல் ஆணையாளருக்கு ஆளுநர் ஊடாகச் சமர்ப்பித்து இருந்தார்.

இம்மனு மீது தேர்தல் ஆணையாளர் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று கோரும் முதலமைச்சரின் எதிர் மனு மீது விசாரணை நடத்திய சென்னை உயர் நீதிமன்ற நீதியரசர் பக்தவத்சலம் முன்கண்ட உத்தரவைப் பிறப்பித்தார். (ஒ-எ)

---

## ஜி. சி. ஈ. சாதாரணதர மாணவருக்கு புலமைபரிசில்

### மக்கள் வங்கி வழங்குகிறது

கொழும்பு ஜூன் 3

ஜி. சி. ஈ. சாதாரணதரப் பரீட்சையில் ஆகக் கூடுதலான புள்ளிகளைப் பெறும் மாணவ, மாணவிகளுக்கு புலமைப் பரிசில் வழங்கும் திட்டம் ஒன்றை மக்கள் வங்கி அமுல் நடத்த உள்ளது.

இதன்படி கடந்த ஆண்டு நடைபெற்ற ஜி சி.ஈ சாதாரணதரப் பரீட்சையில் ஆகக் கூடுதலான புள்ளிகள் பெற்ற 32 மாணவ, மாணவியர் புலமைப்பரிசில் பெற உள்ளனர்.

நாட்டில் ஆகக் கூடுதலான புள்ளிகளைப் பெற்ற 5 பேரும் மாகாணத்துக்கு மூவர் வீதம் 9 மாகாணங்களில் இருந்தும் 27 பேரும் புலமைப்பரிசிலுக்குத் தெரிவு செய்யப்படுவர்.

நாட்டில் ஆகக் கூடுதல் புள்ளிகள் பெற்ற ஐவருக்கு மாதம் ஆயிரம் ரூபாவும், ஏனைய 27 பேருக்கு மாதம் 750 ரூபாவும் இருவருடங்களுக்கு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் வங்கி 32 வருடங்களைப் பூர்த்திசெய்வதை முன்னிட்டு இந்த புலமைப் பரிசில் திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. (இ-6)

---

## சிங்கள குடியேற்றத்துக்கு வவுனியாவில் 1,000 வீடுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 3

தமிழகத்தில் இருந்து திரும்பிய தமிழ் அகதிகளை மீளக் குடியமர்த்துதல் என்ற போர்வையில் சிங்களக் குடியேற்றத்துக்காக வவுனியாவில் ஆயிரம் வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

தாண்டிக்குளம், மாறம்பைக்குளம், வீரபுரம், செட்டிகுளம், முகத்தார்குளம் ஆகிய இடங்களிலேயே இந்த வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

வீடமைப்பு அதிகார சபையின் நிதி உதவியுடன் கட்டடத் திணைக்களம் இந்த வீடுகளைக்கட்டிவருகிறது.

செட்டிகுளம் பகுதியில் 100 வீடுகள் பூர்த்தியாகியுள்ளதாகவும் —

அடுத்த வாரமளவில் அவ்வீடுகள் வழங்கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு முன்னர் வீரபுரம், செட்டிக்குளம் பகுதியில் அமைக்கப்பட்ட 500 வீடுகளில் சிங்களவர் குடியேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

இதேவேளை—

செட்டிகுளத்தில் ஆறுபது லட்சம் ரூபா செலவில் பொலீஸ் நிலையமும்—

16 லட்சம் ரூபா செலவில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

---

## பாதுகாப்புச் செலவுக்குப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மிகுதி இம்மாதம் தொடக்கம் வழங்கப்படும் என்று அரசு உறுதியளித்திருந்தது.

ஆனால் இப்போது ஏற்பட்டுள்ள நிதிப் பற்றாக்குறை காரணமாக, சம்பள உயர்வின் மிகுதிப் பகுதியை அடுத்த வருடத்தில் நிலுவையுடன் வழங்குவது குறித்துப் பரிசீலனை செய்யப்படுவதாக அரசு நேற்று அறிவித்தது.

வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட சம்பள உயர்வில்—

மாதம் மூவாயிரம் ரூபாவுக்கு குறைந்த சம்பளம் பெறுவோருக்கு 60 சதவீதமும்—

மாதம் மூவாயிரம் ரூபாவுக்கு அதிகமான சம்பளம் பெறுவோருக்கு 50 சதவீதமும் – ஜனவரி தொடக்கம் வழங்கப்பட்டு வருகிறது

சம்பள உயர்வை வழங்குவதனை ஒத்திவைப்பது குறித்து அரசு வெளியிட்ட அறிக்கையின் ஒரு பகுதி வருமாறு:-

வரவு - செலவு திட்ட பொறுப்புக்களை சமாளிக்கக் கூடிய விதத்தில் வரவு- செலவு திட்ட துண்டு விழும் தொகையை கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாகவே சம்பள அதிகரிப்பினால் ஏற்படும் செலவை சமாளிக்கக்கூடிய தாக்கங்கள் குறித்து மீள்பரிசீலனை செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

பாதுகாப்பு மற்றும் புனர்வாழ்வு, புனர்நிர்மாண நடவடிக்கைகளுக்கு போதுமான அளவு நிதியை ஒதுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. எனவே பெறப்படும் நிதியில் பெரும்பகுதியை அவற்றுக்காக ஒதுக்க நேரிட்டுள்ளது.

அபிவிருத்தி திட்டங்களுக்கு நிதி உதவி வழங்குவதற்கும் சம்பள உயர்வு போன்ற வழமையான பணிகளை மேற்கொள்வதற்கும் வெளிநாட்டு உதவி, மற்றும் உள்ளூர் வருமானம் ஆகியவற்றில் பெற்றுக் கொள்ளக்கூடிய சகல பரப்புக்கள் குறித்தும் அரசு இப்போது ஆராய்ந்து வருகிறது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது

வரவு - செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகையை கட்டுப்படுத்த வேண்டும் என்று உலக வங்கி அரசை வற்புறுத்தி வந்தது குறிப்பிடத்தக்கது [அ-3-6]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## செல்வன் செ. யோய் வசிகுமார்

17/2, மருதடி றோட், யாழ்ப்பாணம் முகவரியில் வசித்த செல்வன் செ. யோய் வசிகுமார் 29-06-1993 இல் சுவிற்சர்லாந்தில் அகாலமரணமானார்.

அன்னார் திரு கி. அ. செபஸ்தியாம்பிள்ளை [ஓய்வு பெற்ற ஆசிரியர்], திருமதி மா. ம. செபஸ்தியாம்பிள்ளை [ஓய்வு பெற்ற ஆசிரியர்] ஆகியோரின் அன்பு மகனும், மரியபுஷ்பம், மறீனா, சதா, வசிகரன், கொலின் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

தகவல்:

கி. அ. செபஸ்தியாம்பிள்ளை (தகப்பன்)

17/2 மருதடி றோட்,
யாழ்ப்பாணம். (26333)

## சண்முகம் புஸ்பராசா

(களஞ்சியப் பொறுப்பாளர் மாநகரசபை, யாழ்ப்பாணம்)

உசனைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகக் கொண்டவரும், தற்போது சாவகச்சேரி தபால் சந்தோர் வீதியில் வசித்தவரும், முன்னாள் வவுனியா நகரசபை களஞ்சியப் பொறுப்பாளருமாகிய சண்முகம் புஸ்பராசா 02-07-1993 வெள்ளிக்கிழமை அதிகாலை காலமானார்.

இவர் உசனைச் சேர்ந்த சண்முகம், காலஞ்சென்ற பார்வதிப் பிள்ளையின் சிரேஷ்ட புத்திரனும், புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற அப்பாக்குட்டி, அன்னம்மாவின் மருமகனும், கமலாம்பிகையின் அன்புக் கணவரும், கீர்த்திகா, கட்சன் (சுவிஸ்), சுஜன்நாத் ஆகியோரின் அன்புத் தந்தையும், தயானந்தசோதி (கனடா), இராசநாயகம் (லிகிதர்), சிவதாஸ் (அவுஸ்திரேலியா), புவனேஸ்வரி, புஸ்பராணி, கௌரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஈஸ்வரபாதம் (இளைப்பாறிய தபால அதிபர்), சிவபாதம் (மல்லாகம்), தங்கராசா (தபால் அதிபர் மட்டக்களப்பு), சோமசுந்தரம் (வர்த்தகர்), காலஞ்சென்ற சிவபாதம் (தேவிபுரம்), சுந்தரலிங்கம் (உரிமையாளர், மயூரா ஹோட்டல் கதிரேசன் வீதி, கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:

அ. சுந்தரலிங்கம்.
(மைத்துனர்)

56, புதிய வீதி,
அத்தியடி,
யாழ்ப்பாணம். (26341)

## திருமதி முத்துக்குமாரு மரகதம்

காரம்பன் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், சுண்டுக்குளியில் வசித்தவருமாகிய திருமதி முத்துக்குமாரு மரகதம் 2 7 93 இல் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற முத்துக்குமாருவின் (ஊர்காவற்றுறை வர்த்தகர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஆ.சு. நடராசா, சு. குமாரசாமி ஆகியோரின் சகோதரியும், கந்தசாமி (பாட்டா), மகாதேவன் (கனடா), மகேஸ்வரன் (ஊர்காவற்றுறை ப.நோ.கூ. சங்கம்) இராஜினி ஆகியோரின் அன்புத் தாயாரும், நித்தியலெட்சுமி, ஜெயராணி (கனடா), மனோகரன் (புஸ்பா ரேடேஸ், கொழும்பு), தவரஞ்சிதம் (அனலைதீவு) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெயகாந்தன், ஜெயபாரதி, ஜெயமாறன், விஜிதா, முரளி, குமரன், சுரிகரன், துஷியந்தி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (3-7-93) இன்று சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 3 மணியளவில் துண்டி மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்:

மு. மகேஸ்வரன்
(மகன்)

6, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். (26342)

## மாதன் கதிரமன்

சாவகச்சேரி கச்சாய் வீதி, வீரபத்திரர் கோவிலடியைச் சேர்ந்த மாதன் கதிரமன் 30.06.93 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் நாகம்மாவின் அன்புக் கணவரும், திருநாவுக்கரசு (கொழும்பு), நிர்மலா, நாகதம்பிரான் (சுவிஸ்), மீனா (சுவிஸ்), பவானி, டனேஸ் ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், கணபதிப்பிள்ளை, இராஜவதி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

இறுதிச் சடங்குகள் 04-07-93 ஞாயிறு காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று கண்ணாடிப்பிட்டி மாயனத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

உற்றார், உறவினர், இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

சி. செல்வகுமார்
(பேறாமகன்)

சாவகச்சேரி. (சி-5427)

## தம்பித்துரை மகேந்திரன்

சுண்டுக்குளியைச் சேர்ந்த தம்பித்துரை மகேந்திரன் (இளைப்பாறிய உத்தியோகஸ்தர், - C.W.E) நேற்றுக் காலமானார்.

அன்னார் சீதாலட்சுமியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை, வேலணை) அன்புக் கணவரும், சாயிலதாவின் அன்புத் தந்தையும், ஸ்ரீஸ்கந்தராசாவின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

ம. சீதாலட்சுமி
(மனைவி)

32/4, விதானையார் வீதி,
சுண்டுக்குளி. (26345)

# சங்கக் கடைகள் இன்று திறப்பு

யாழ். ப.நோ.கூ. சங்கக் கிளைகள் இன்று பூரணை தினமானபோதும் திறந்திருக்கும் என்று சங்கத்தின் பொதுமுகாமையாளர் திரு. மூ. சிவப்பிரகாசம் தெரிவித்தார்.

இதேவேளை—

இன்று தொடக்கம் உலர் உணவு அட்டை ஒன்றுக்கு கிலோ 27 ரூபா 50 சத வீதம் 2 கிலோ சீனியும், ஒரு லீற்றர் மண்எண்ணெய் 18 ரூபாவாகவும் விநியோகிக்கப்படும் என்றும் அவர் சொன்னார். (ஒ-17-162)

# இளாலியில் ஒதுங்கிய கோழிக்குஞ்சுகள்

இளாலிக் கடற்பகுதியில் நேற்று முன்தினம் காலை கோழிக்குஞ்சுகள் இறந்த நிலையில் கரை ஒதுங்கின.

காலநிலை சீரில்லாததால் பொருள்களை ஏற்றி வந்த படகுகள் சில கடலில் மூழ்கி விட்டன என்றும்—

அந்தப் படகுகளில் உணவுப் பொருள்கள், சைக்கிள்கள் போன்றவையும் ஏற்றிவரப் பட்டிருந்தன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

## கரும்புலிகள்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த யோகரத்தினம் யோகி வெளியீட்டுரை நிகழ்த்தினார்.

முதலாவது இசைநாடாவை விடுதலைப் புலிகளின் துணை இராணுவத் தளபதி திரு பால்ராஜ் கல்விக் கழக பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரனுக்கு வழங்கினார். (ஒ-3)

## சிங்கள...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரதேச செயலர் அலுவலகமும்— அமைக்கப்பட்டு வருகின்றன.

பொதுச்சந்தை கட்டடமும் அமைக்கப்பட்டு வருகிறது.

## மக்கள் ..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நேற்றுக் காலை ஐ. நா. தூதரக அதிகாரிகளை சந்தித்த இணையப் பிரதிநிதிகள் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து விளக்கிக் கூறினர்.

பூநகரிப் பாதையை திறப்பது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து ஐ. நா. அதிகாரி காசிம் உர்கான் பிரதிநிதிகளிடம் விளக்கிக் கூறினார்.

பூநகரிப் பாதை விவகாரத்தில் அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான விரிசல் நிலை குறுகி வருவதாகவும்—

ஓர் இணக்க நிலை ஏற்படுமானால் தற்போது பழுதடைந்த நிலையில் இருக்கும் கேரதீவு — சங்குப்பிட்டி போக்குவரத்துப் பாதையை ஒரு மாத காலத்தினுள் புனரமைத்து மக்கள் போக்குவரத்துக்கு திறந்துவிட முடியும் என்றும் அவர் சொன்னார். (உ 3-162)

## மறியற் ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கு மட்டுமே உலர்உணவு நிவாரணம் வழங்குமாறு கொழும்பில் இருந்து பணிப்புரை கிடைத்ததாலேயே உலர் உணவு நிவாரணம் நிறுத்தப்பட்டதாக அவர் விளக்கமளித்தார்.

அதனைத் தொடர்ந்து நேற்று இரண்டாவது நாளாக மறியற் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த சுமார் 500 பேர் முற்பகல் 11 மணியளவில் தமது போராட்டத்தை முடித்துக்கொண்டனர். (அ-12-165)

## பாணின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வதால் —

கொழும்பில் பாணுக்கு ஒரு ரூபா உயர்த்தப்பட்டுள்ள போதும் இங்கு 50 சதம் மட்டுமே உயர்த்தப்படுவதாகவும் — யாழ். பேக்கரி உரிமையாளர் சங்கம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாகிஸ்தானில் விரைவில் இராணுவ ஆட்சி வரும்?

இஸ்லாமாபாத், ஜூலை 3

பாகிஸ்தானில் எந்த நேரத்திலும் இராணுவ ஆட்சி ஏற்படக்கூடிய ஆபத்து உருவாகி இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தான் பிரதமர் ஷெரிப் நவாஸின் ஆலோசகர் முஷாகின் ஹுசேன் இத்தகவலை வெளியிட்டார்.

பஞ்சாப் மாகாணத்தில் நேரடி ஆட்சியை பிரதமர் ஷெரிப் கொண்டு வந்ததை ஜனாதிபதி குலாம் இஷாக்கான் எதிர்த்து வருவதை அடுத்து அங்கு அதிகாரப் போட்டி மூன்றாவது கட்டத்தை அடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி ஸியா உல் ஹக் விமான விபத்து ஒன்றில் கொல்லப்பட்டதன் பின்னர் பாகிஸ்தான் அரசியலில், இராணுவம் தலையிடாது ஒதுங்கி இருந்து வருவது தெரிந்ததே.

இதற்கிடையில்—

ஜனாதிபதி குலாம் இஷாக் கானுடன் ஏற்பட்டுள்ள அதிகாரப் போட்டி தொடர்பான அரசியல் முட்டுக்கட்டை நிலையை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வரும்படி பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப்பை பாகிஸ்தான் இராணுவத் தளபதி அஹமத் வாகீத் கோரியுள்ளார்.

இதற்காக இருவாரகாலக் கெடு ஒன்றையும் பிரதமர் ஷெரிபுக்கு இராணுவத் தளபதி விதித்துள்ளார்.

இக்காலக்கெடுவுக்குள் தீர்வு காணத்தவறின் புதிய நாடாளுமன்றத் தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்கும்படியும் இராணுவத் தளபதி பிரதமரைக் கோரியுள்ளார்.

நேற்றுமாலை பிரதமருடன் இராணுவத் தளபதி 90 நிமிடங்கள் நடத்திய பேச்சுகளின் போது தளபதி இந்த நிபந்தனையை விதித்தார்.

இடையிடையில் —

பாகிஸ்தான் இராணுவத் தலைவர்களின் கூட்டம் ஒன்று இன்று ராவல்பிண்டியில் உள்ள இராணுவத் தலைமையகத்தில் நடைபெறுகிறது.

இது முக்கியமான கூட்டம் என்று அரசியல் அவதானிகள் தெரிவித்தார்கள். இக் கூட்டத்துக்கு இராணுவத் தளபதி அஹமத் வாகீத் தலைமை வகிப்பார். (ஓ-எ)

# அழகுராணிக்கு தூதர் பதவி வழங்க முயற்சி நடந்ததாம்

கொழும்பு, ஜூலை 3

அழகுராணி ஒருவரை இலங்கைத் தூதராக முக்கிய வெளிநாடு ஒன்றில் நியமிக்க மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸாவின் ஆட்சிக்காலத்தில் முயற்சிக்கப்பட்டது என்றும்—

அவரது நியமனம் ஜனாதிபதியின் அங்கீகாரத்துக்கு வந்தபோது, திரு பிரேமதாச அதிர்ச்சியடைந்து, அந்த நியமனத்தை உடனடியாக ரத்துச் செய்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அந்த அழகுராணி ஜனாதிபதி மாளிகைக்கு அடிக்கடி சென்று வந்தவர் என்றும் திருமதி ஹேமா பிரேமதாசாவுடன் அவர் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.


# கொக்குவில் இந்துக் கல்லூரி கல்விக் கண்காட்சி

ஜூலை 6, 7, 8 - 1993

விஞ்ஞானம், வர்த்தகம், கலை, தொழில் நுட்பம், ஆங்கிலம், அழகியற்கல்வி தொடர்பான பொருட்காட்சி.

இக் கண்காட்சியை ஆரம்பித்து வைப்பவர்:

திரு. துரை தியாகராஜா

பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்)
கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்.

நேரம்:- ஜூலை 6, காலை 10 மணி.

அனுமதி:- மாணவர் ரூபா 2/-
வளர்ந்தோர் ரூபா 5/-

- அதிபர்

(5426)



ஸ்கந்தன் துணை

ஸ்கந்தவரோதயக் கல்லூரி பழைய மாணவர் சங்க

# பழைய மாணவர் ஒன்றுகூடலும் பொதுக்கூட்டமும்

மேற்படி கூட்டம் 04—07—93 ஸ்கந்தா மண்டபத்தில் நடைபெறும்.

நிகழ்ச்சி நிரல்:

| | |
|---|---|
| மு. ப. 9.00 — 10.00 | மணி வரை பதிவு செய்தலும் வரவேற்றல். பழைய மாணவர் ஒன்றுகூடலும். |
| மு. ப. 10.00 — 12.00 | மணிவரை துடுப்பெடுத்தாட்டமும், மற்றும் விளையாட்டுக்களும் (Indoor Games) |
| நண்பகல் 12.00 | மதிய போசனம். |
| பி. ப. 2.00 | மணிக்கு மாணவர்களைப் பாராட்டி கௌரவித்தல். |
| பி. ப. 2.30 | மணிக்கு பொதுக் கூட்டம். |
| பி. ப. 5.30—6.30 | மணிவரை உதைபந்தாட்டமும் மற்றும் விளையாட்டுக்களும் (Indoor Games) |

கந்தரோடை
03—07—1993

சேது விபுலானந்தா
செயலாளர்

குறிப்பு: 30—06—93 வரை அங்கத்தவர்களது விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப் பெற்றமையால் அங்கத்தவர்களுக்கு தனிப்பட்ட முறையில் பற்றுச்சீட்டு, அங்கத்துவ அட்டை மற்றும் வரவேற்புக் கடிதங்கள் அனுப்ப இயலாமையினால் தயவு செய்து இவற்றை 04—07—93 காலை 9.00 மணிக்கு (ஞாயிற்றுக்கிழமை) மண்டப நுழைவாயிலில் பெற்றுக் கொள்ளலாம். சிரமத்திற்கு மன்னிக்கவும்.

நேர்மை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன செயற்படுவோமாக

(சி/2018) நன்றி.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 392/3 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 03-07-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org